விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25


ஒலி 028 வள்ளுவர் ஆண்டு 2055 தை 02 செவ்வாய்க்கிழமை (16.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்., மன்னார் மாவட்டங்களில் தரம் குறைந்த காற்று

### முகக் கவசம் அணியுமாறு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் தரம் குறைந்த காற்று காணப் படுவதாக எச்சரிக்கப்பட் டுள்ளது.

இதனால் பொதுமக்கள் முகச் கவசம் அணியுமாறு சுகாதாரத் தரப்புக் கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன் னார் மற்றும்கொழும்பு, 11

## ஜனாதிபதித் தேர்தலையே மக்கள் விரும்புகின்றனர்

### ஆய்வொன்றில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பெரும்பான் மையான மக்கள் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த விரும்புவதாக தனியார் நிறு வனம் ஒன்று நடத்திய ஆய் வில் தெரியவந்துள்ளது.

லங்கா ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில், 20 சதவீத மக்கள் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை விரும்பு வதாக தெரியவந்துள் ளது. 11

# நாடு முன்னோக்கிச் செல்ல தேசிய நல்லிணக்கம் அவசியம்

## யாழில் நீதியமைச்சர் விஜயதாஸ




(யாழ்ப்பாணம்)

**நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.**

இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று யாழ்.ஆரியகுளம் நாக விகாரை யில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தற்போது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் இக்கட்டான காலகட்டத் 11

## பருத்தித்துறை கடற்பரப்பில் 10 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப் புக்குள் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீன வர்கள் 10 பேர் நேற் றுக் காலை கடற்படை 11

## தமிழர்களின் நீதிக்கான போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்

### பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர்



(லண்டன்)

தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என பிரித் தானிய எதிர்க்கட்சித் தலைவர் கீர் ஸ்ரார்மர் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கலை முன்னிட்டு பிரித்தானிய தமிழ் சமூகத்திற்கு வாழ்த்துத் தெரிவித் துள்ள அவர், எமது 11

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

### ஆயிரத்து 468 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெ டுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் கடந்த 24 மணித்தியாலங்களில் ஆயி ரத்து 468 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 11

### ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில்

## இரு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் ஆயுள் தண்டனை விதிக் கப்பட்ட இரு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக குறிப்பிட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங் 11

## இரு வாரங்களில் 5 ஆயிரம் டெங்கு தொற்றாளர்கள்

(கொழும்பு)


இரு வாரங்களில் நாட் டில் 5 ஆயிரம் டெங்குத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் (2024) முதல் பதினைந்து நாட்களுக்குள், 11

## வல்வெட்டித்துறையில் மாபெரும் பட்டத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற மாபெரும் பட்டத்திருவிழாவில் ஆகாய விமானம் தாங்கிய போர் விமானம் என்ற 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

போதைக்கு எதிரான நடவடிக்கை
# பாதுகாப்பு அமைச்சருக்கு அச்சுறுத்தல் கடிதம்

(கொழும்பு)

குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர் களை இலக்கு வைத்து நாட ளாவிய ரீதியில் மேற்கொள்ளப் பட்டு வரும் யுக்திய நடவடிக்கை யினை நிறுத்துமாறு கோரி தமக்கு அச்சுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கடிதம் கடந்த வியாழன் அன்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு தபால் மூலம் அனுப் பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அச்சுறுத்தல் கடிதம் இந்த நாட்டில் உள்ள ஒருவரால் தபாலில் அனுப்பபப்பட்டுள்ளது, எத்தகைய அச்சுறுத்தல்கள் வந் தாலும் தனது பணி உத்தரவை நிறுத்தப் போவதில்லை என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச் சர் குறிப்பிட்டார்.

பாதாள உலகத்தின் பண த்தை நம்பியிருக்கும் நாசகாரர் களே இந்த நடவடிக்கைக்கு தடை யாக உள்ளனர்.

இவர்கள் சர்வதேச சமூகத் திற்கு அனுப்பிய மனுக்களின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் உயர் அதி காரிகள் இந்த விசேட நடவடிக் கைக்கு எதிராக அறிக்கைகளை வெளியிடுகினறனர் என்றார். (ம-7)

# யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையால் மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பு

## சர்வதேச அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக உக்கிரமடைந்து கணிசமான மனித உரிமை மீறல் களுக்கு வழி வகுத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப் பகம் மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழு உட் பட 30 இற்கும் மேற்பட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2023 டிசம்பர் 17 ஆம் திகதி பதில் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னகோன், பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அல் லஸின் ஒப்புதலுடன், "போதைப் பொருள் அச்சுறுத்தலை" கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் "யுக்திய" என்ற தலைப்பிலான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கை இன்று வரை நடந்து வரு கிறது, அன்றாடம் குறைந்தது ஆயி ரம் பேர் கைது செய்யப்படுகின்றனர்

இலங்கையின் போதைப் பொருள் பாவனை அல்லது பயன் படுத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக ஏற்கனவே கடுமையான அடக்குமுறையின் பின்னணியில் இந்த நடவடிக்கை வெளிவருகிறது.

இலங்கை பொலிஸ் துறையு டன், ஆயுதப்படை உறுப்பினர்க ளும் இந்த நடவடிக்கையை ஆத ரித்து வருகின்றனர், இதில் பல மனித உரிமை மீறல்கள் நடந்த தாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள் ளது.

இந்த மீறல்களில் முதன்மை யாக ஒதுக்கப்பட்ட சமூக-பொரு ளாதார சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிரான தன்னிச் சையான கைதுகள் அடங்கும் பிடியாணை அல்லது நியாய மான சந்தேகங்கள் இல்லாமல் நடத்தப்படும் தேடல்கள் மற்றும் பொது இடங்களில் மேற்கொள் ளப்படும் முறைகேடான தேடுதல் கள் மற்றும் கைதுகள் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டன, தனியுரிமைக்கான உரிமை மட்டு மல்ல, ஒரு நபரின் நிரபராதி எனக் கருதப்படும் உரிமையை யும் இதன்மூலம் மீறப்படுகிறது.

சட்டத்தரணிகளின் கூற்றுப் படி, கடந்த காலங்களில் போதைப் பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட அல்லது கட்டாய புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்ட நபர்களிடம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்படாத போதும் கூட நபர்கள் இதன்பேது கைது செய் யப்படுகிறார்கள்.

பிரதான வாழ்வாதாரத்தில் ஈட்டுபவர்கள் மற்றும் தாய்மார் கள் கைது செய்யப்பட்டமை இலங் கையில் பொருளாதார நெருக்கடி யின் போது குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வை மோசமாக பாதித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை கள் ஆணைக்குழு, தற்போது ள்ள சிறைச்சாலை நிலைமை கள் மற்றும் கைதிகளை நடத் துவது "மனிதாபிமானமற்றது மற்றும் இழிவானது" என்று கூறியுள்ளது. (ம-7)

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்

கொழும்பு முகத்துவாரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரந்திய உயன வீட்டுத் தொகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் 40 வயது டைய நபர் ஒருவர் காயமடைந் துள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

முச்சக்கரவண்டி யில் வருகை தந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டு தப்பிச்சென் றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்த னர். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க பொருளாளரும் நிறைவேற்று பொறியியலாளர்
பணிமனை, கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி
தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய
திரு. **சி. செந்தூரன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்
## சிவஞானம் தவமணி

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
வடமாகாணம்.**

(18642)

# மரண அறிவித்தல்



## திருமதி அனுரா மகேஸ்வரி (குஞ்சு)

ஆவரங்கால் மேற்கு, புத்தூர் நெல்லியோடை வீதியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனுரா மகேஸ்வரி (குஞ்சு) அவர்கள் 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தவமணி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அனுராவின் (குழு) பாசமிகு மனைவியும் கர்சன் (சுவிஸ்), பிரதீப், தர்சனா, ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற விஸ்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலா, ரஞ்சி, சித்திரா, மஞ்சுளா, பிறேமா, சிறி ஆகியோரின் மைத்துனியும் தர்சன், கார்த்தி, நிதர்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும் அகானா, ஆயிரா ஆகியோரின் அம்மம்மாவும் பிரணித்தாவின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க் கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்

(C-8140)

# வாடகைக்கு

கடை, மாடி வீடு, விசாலமான களஞ்சிய அறை,
அரிசி ஆலை அமைப்பதற்கான இட வசதி ஆகியன
வாடகைக்கு உள்ளது. அமைவிடம் வலிகாமம்
மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ளது.
இருப்பிடம்
யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி - சுளிபுரம்

**077 336 6485**

(C-8138)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி கதிரவேலு

முருகன்திடல் புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கதிரவேலு அவர்கள் நேற்று (15.01.2024) அதிகாலை இவ்வுலகை விட்டு நீத்தார்.

அன்னார் இளையதம்பி - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, அப்புத்துரை மற்றும் இராசம்மா, நடேசன், சின்னத்துரை, காலஞ்சென்ற சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நல்லவன் - அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரமநாதன், கந்தையா, புவனேஸ்வரி, தணிகைநாயகி மற்றும் கதிரவேலு, திருமலர், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இரத்தினம் மற்றும் பவளம், சுப்பிரமணியம், செல்வராசா, சின்னையா, இராசேந்திரன், பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலகவதி, புஸ்பராசா (யா/வண்ணை நாவலர் ம.வி), பஞ்சமூர்த்தி (யா/அச்சுவேலி புனித செந்திரேசா மகளிர் பாடசாலை), தயாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதாசன், சுபாஜினி (யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி), நடராசா (இ.பெ.கூ AMT இருபாலை), ஜெயப்பிரசன்னா ஆகியோரின் அன்பு மாமனும் வித்யாதரன், தபேந்திரன், பகீரதன், ஹரிக்சரன், ஹனுசியன், நிலாவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க் கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் அந்திரான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 500 0622

(18644)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு வெளியேறும் வல்லுநர்களால் பொருளாதாரத்திற்கு பாரதூரமான பாதிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

**தொழில்சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது புதிய விடயம் அல்ல. ஆனால் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரதூரமான நிலைமை ஏற்படலாம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**



பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது பொருளாதார ரீதியாக சாதகமான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதைய நெருக்கடி தற்காலிகமானது. சரியான பாதையில் சென்றால் இதனை வென்றிட முடியும்.

பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் ஏற்படவில்லை. உலகின் மற்றைய நாடுகளைப் போலவே நாமும் சரிந்தோம். ஆனால் உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நாம் விரைவாக மீட்சி பெற்றோம்.

எங்களின்கஷ்டங்கள்அனைத்தும் விரைவில் தீர்ந்துவிடவில்லை. இதற்கு சிறிது காலம் எடுத்தாலும் தற்போது பொருளாதாரம் சாதகமாக இருப்பதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளோம்.

ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டுவது நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழியாக அமையாது. இது ஒரு தற்காலிக நிலைமை. எதிர்காலத்தில், இழந்த நம்பிக்கைகள் அல்லது நன்மைகளை மீண்டும் பெறுவோம் என குறிப்பிட்டுள்ளார்.(நி-5-6)

## உச்சம் தொடும் மரக்கறிகளின் விலை

(கொழும்பு)

நாட்டில் முதல் தடவையாக கடந்த சனிக்கிழமை ஒரு கிலோ கிராம் கரட் 1000 முதல் 1100 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், நுவரெலியா பிரதேச விவசாயிகளிடம் இருந்து கடந்த சனிக்கிழமை ஒரு கிலோகிராம் கரட் 900 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டதாகவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்தனர். மேலும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. (நி-5)


கொலின்ஸ் விளையாட்டு கழக ஏற்பாட்டில்
CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்
CARNIVAL



இடம்: கொலின்ஸ்
விளையாட்டு மைதானம்
(குஞ்சர் கடையடி, நெல்லியடி.)
காலம்: ஜனவரி 17 ஆம் திகதி வரை
நீடிக்கப்பட்டுள்ளது
தொடர்புகளுக்கு:
0772546511, 0775002840
(8137)


## இலங்கை வந்தடைந்தது ரிவேரா சொகுசு கப்பல்

(கொழும்பு)


ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் நேற்று அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

மாலைதீவில் இருந்து 1,090 பயணிகள் மற்றும் 790 பணியாளர்களுடன் குறித்த கப்பல் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ஷல் தீவுகள் கொடியுடனான இந்தக் கப்பலில் அமெரிக்க, கனேடிய மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று வருகை தந்துள்ளது.

இந்த குழுவினர் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் அதன்பின்னர் தாய்லாந்தின் புக்கெட் துறைமுகத்துக்கும் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. (நி-5-6)



## விமான நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு




(கொழும்பு)

நாட்டின் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விமான நிலையத்தினூடாக முன்னெடுக்கப்படும் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் விமான நிலையப் பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை 1,325 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# சிம்பாவேயிடம் போராடி வென்றது இலங்கை அணி

சிம்பாவே அணிக்கு எதிரான முதலாவது இருபது -20 போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று 1 – 0 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் சிம்பாவே அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது-20 போட்டி ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்த நிலையில் சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சிம்பாவே அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடிய போதும் 5 ஆவது ஒவரின் முதலாவது பந்துவீச்சில் முதலாவது விக்கெட் சாய்க்கப்பட்டது.



சிம்பாவே அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டினாஷே கமுன ஹுªகம்வே 26 ஓட்டங்களோடு மகேஷ் தீக்ஷனாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் சிம்பாவே அணி 5 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களை குவித்தது. பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக தீக்ஷன மற்றும் ஹசரங்க ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் சமீரா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்.


இதனை தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணியின் முதலாவது விக்கெட் முதலாவது ஓவரில் வீழ்ந்தது. பதும் நிஸ்சங்க 2 ஓட்டங்களோடு ஆட்டமிழக்க தொடர்ந்து 4.2 ஆவது ஓவரில் குஷால் பெரேராவும் 5.2 ஆவது ஓவரில் குஷால் மெண்டிஸ்ஸும் ஆட்டமிழக்க இலங்கை அணி 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இறுதி ஓவரில் இலங்கை அணிக்கு 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இதன்போது முதலாவது மற்றும் இரண்டாவது பந்துகளில் தொடர்ந்து 2 நான்கு ஓட்டங்களை ஏஞ்சலோ மத்தியூஸ் பெற்றுக் கொடுக்க அணிக்கு 3 பந்துகளில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

இருப்பினும் 4 ஆவது பந்தில் மத்தியூஸ் 46 ஓட்டங்களோடு ஆட்டமிழந்து வெளியேறினார். இதனை தொடர்ந்து வந்த சமீரா 4 ஓட்டங்களை அடிக்க இலங்கை அணிக்கு இறுதிப்பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட சமீர 2 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்கு பங்களித்தார். (நி-5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3017


### மதுசங்கா





### பர்மிகா




### வதுசன்




### ரிஜிந்தன்




### சாவிரி




### சியானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பட்டிப் பொங்கல்
# கோமாதாவைப் பேணி கொழிதுலகு வாழ்வோம்

உயிரினாங்களில் வணக்கத்திற்குரியதாகத் திகழ்வது இறைவனையே சுமக்கும் பேறுபெற்ற இடபங்களின் வகையைச் சேர்ந்த பசுவினங்களாகிய முத்தேவர்கள், முத்தேவிகள், முனிவர்கள், மலைகள், நதிகள், லக்ஷ்மி, தூய தீர்த்தங்கள், சூரிய-சந்திரர்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் போன்றவர்களெல்லாம் பிரியாது சூழ்ந்திருக்கும் அம்சங்கள் அமைந்த கோமாதாவை சகல மக்களும் வணாங்குவோம்.

**ஆடினாய் நறு நெய் யொடு பால்தயிர்**
**அந்தணர் பிரி யாதசிற் றம்பலம்**
**நாடினாய் இடமா நறுங்**
**கொன்றை நயந்தவனே**
**பாடினாய் மறை யோடுபல்கீதமும்**
**பல்சடைப்பனி கால்கதிர் வெண் திங்கள்**
**ஆடினாய் அருளாய் சுருங்க**
**என் தொல்வினையே.**

பசுவின் பால்,தயிர், நெய் என்னும் பஞ்சகௌவியத்தால் திருமுழுக்காட்டுப்பெறுவன், தில்லைச்சிற்றம்பலத்தை தன் அறிவானந்தத் திருக்கூத்துக்கு ஆடல் அரங்காக விரும்பி உறைபவன். எம்மைத் தொடர்ந்து தொல்லைப் படுத்தும் வினைக்கூட்டத்தை ஒழித்து எம்மைக் காத்தருள்பவன் என்பதை அறிவோம் ஓம்நமசிவாய.

எப்பிழை செய்தாலும் எப்பாவத்திலிருந்தும் உள்ளன் போடு கோமாதாவைப் பேணினால் இறைவன் அருளால் நாம் நல்ல பேறைப் பெறுவோம் "ஓம் நமசிவாய"

**"யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை"**
திருமூலர் 252 2 ஆவது வரி

பசுவை நன்நீரில் நீராட்டி, தூபம் காட்டி, பட்டாடை சாத்தி, திருநீறு -சந்தனம் சாத்தி, பச்சை அரிசியில் பொங்கல் நிவேதனம் (படைத்து) செய்து, பொன் ஒளி வீசும் விளக்கு ஏற்றி, தூப தீபம் காட்டி, திருமுறைகள் ஓதி வணாங்குவோம். பசுவுக்கு ஒரு வாயுறை படைத்த நிவேதனத்தில் எல்லா வகைகளையும் ஒரு தட்டில் வைத்து பசு சுவைப்பதைப் பார்த்து நாம் திருப்தி அடைவோம். நாமும் நம் உள்ளமும் தூய்மையாவோம் "ஓம்நமசிவாய"

இது கோமாதா வழிபாட்டில் மிக முக்கியம். எல்லாத் தெய்வங்களையும் வழிபாடு செய்த பூரணத் திருவருள் கிடைக்கும்.

**"யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி"**
திருமந்திரம் 252(3)

இன்று நாம் குறுகிய மனத்துடன் உண்ணும் போது யாவருக்கும் ஒருகைப்பிடி உண்டி கொடுத்து மற்றவர்களது இயற்கைச் சீற்றத்தால், பெருவாரியான மக்கள், பெருவெள்ள அனர்த்தத்தினால் சொல்லனா துன்பங்களிற்கு ஆளாகப்பட்டுள்ளவர்களிற்கு அவற்றை உணர்ந்தோர்களுக்கும் உணர்த்துவோர்களுக்கும் உரையும் பெருமை என, உயிர் கொடுத்தும் உள்ளொளி கொடுத்தும் உலவாத பேரின்பம் கொடுத்தும் வருவன. அம்மகா தேவனுடைய அடியார்களையுடையன. நமது கடமைகளையுடையன

**மார்த்தாண்ட மகோதயப் பாடலில்**
**"திடம்பெற்ற ஞானிகள் சேர்கையினால் பசிதீர்க்கையினால் உடம்புற்ற உண்மை உறுகையினால் உபதேசிக்கையால்"**

**தக்கவர்களுக்கு தக்க நேரத்தில் செய்வதே தருமம். இப்படியான சில அனர்த்தங்களின் நமது யாழ் வர்த்தகர்கள் வர்த்தகச் சங்கம் மூலம் முன்னர் உதவியவர்கள் என்பதை நன்றி கூறி எல்லோரும் ஒன்று கூடி (சிறு தொகை பெருவெள்ளம்) வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் செய்வோம். "ஓம் நமசிவாய". புகழ், செல்வம், இளமை, வசதி இவை எல்லாம் நிறைந்திருந்தும் வளம் உங்களைத் தழுவி நின்ற நாளில் தருமங்கள் செய்ய தவறிவிட்டோமே என மனவருத்தப்படாமல் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்டி கொடுத்தும் உயிர் கொடுத்தும் உணர்வு கொடுத்தும் உலவாத பேரின்பம் கொடுத்தும் அவர்களுடன் இன்புறுவோம் "ஓம் நமசிவாய"**

**"நாம் தருமம் செய்வதை விட பிறரை, தருமம் செய்ய வைப்பதே மாபெரும் தருமமாகும்"**
அன்னைச் சித்தர்

அறம் செய்ய விரும்பு - ஔவையார் வாக்கு எல்லோரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவோம்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கன் களைவதாம் நட்பு"**
திருவள்ளுவர் வாக்கு

252 வது திருமந்திரத்தில் 4 ஆவது வரி
**"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"**

எல்லோரிடமும் அன்பாக இருப்பது, இனியவை கூறுவது, இனிய சொற்களை பேசுவதால் யாவருக்கும் முடியக் கூடிய தானே!

**நீ எவ்வளவு உயர்ந்தவன் என்பது உன் பிறப்பிலோ உன் படிப்பிலோ அல்லது உன் பணத்திலோ அல்லது உன் அறிவிலோ அல்லது உன் புகழ்ச்சியிலோ இல்லை**
**மற்றவர்களை நீ எப்படி இன்சொற்களால் மதிக்கிறாய் என்பதில் தான் உள்ளது.**

திருப்பாவையின் தனியன்கள் ஆண்டாள் திருப்பாவை(28)

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம். அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து, உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம். குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னோ குறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது அறியாத பிள்ளைகளோ மாண்பினால், உன்றன்னைச் சிறுபேரமைத்தனவும் சீறு யருளாதே.
இறைவா! நீ பறையேலோ ரெம்பாவாய்.

குறைவு ஒன்றுமில்லாத கோவிந்தனே! உடலை வளர்க்கும் நாம் **பசுக்களின்** பின் செல்வோமாயினும், அறிவு சிறிது இல்லாத எங்கள் இடைக்குலத்திலே நீ பிறந்து வாழ்கின்ற புண்ணியத்தினைப் பெற்ற எமக்கு நீங்காத உறவாகி இருக்கும் நாம் (சிறுமிகள்) உன்னிடம் பக்தியினால் உங்களைச் சிறுசிறு பெயர்களை இட்டு அழைத்தோம். எங்கள் மீது சினம் கொள்ளாத எங்கள் நோன்புக்கு அருள்புரிந்து பறையைத் தந்தருள்வாய்.

**இறைவன் அருளும் விதம் திருமந்திரம் 280**
**இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்**
**உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்**
**கொழுந்து அன்பு செய்து அருள் கூரவல்லார்க்கு**
**மகிழ்ந்து அன்பு செய்யும் அருள் அது ஆமே!**

உயிர்கள் தன்னிடம் அன்பு செய்தலை இகழ்ந்ததையும் மெய் அன்பு கொண்டிருத்தலையும் சிவன் அறிவான். இதற்கேற்பவே அவன் தன் அருளை விரும்பி வழங்குவான் ஓம் நமசிவாய.

பஞ்சபூதங்களால் ஆயினும் கள்ளத்தனத்துக்கு இடமாயினும் மாமிசமும் புழுக்களும் உள்ளதுமான வீடு நெருப்பு எழுவது போல் பேச்சுக்கள் பிறக்கின்ற கோவம் எனும் ஆணவம் நிறைந்த தோலாலாய குரம்பை ஆகிய உடம்பை இனி நான் சுமக்காத படி இறைவா! சிவனே! கோமாதாவை தினம் வணங்கி பரம்பொருளை யாம் காண அருள்புரிவாயே.

"ஓம் கோமாதா ஓம் நமசிவாய"



**க.கு.க சிவபாலன்**
**தேசபந்து, தேச அபிமானி**

# இராசிபலன்

**16.01.2024**
**தை 02, செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி காலை 7.47 மணிவரை**
**சஷ்டி பின்னிரவு 5.29 மணிவரை**

**பூரட்டாதி முற்பகல் 11.33 மணிவரை**
**சுபநேரம் -11.04-12.34 மணிவரை**
**இராகுகாலம்-3.34-5.04 மணிவரை**
**சஷ்டி விரதம், மாட்டுப்பொங்கல்**

**சந்திராஷ்டமம்**
**ஆயிலியம், மகம்.**

**வளவன்**


மேஷம்

வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை உருவாகும், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


கடகம்

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.


துலாம்

தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியம் சீராகும்.


மகரம்

சிலர் உங்களிடம் தொழில் ரீதியான உதவி கேட்டு வரலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.


ரிஷபம்

பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


சிம்மம்

உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


விருச்சிகம்

தொலைதூரத்து உறவினர்கள் சந்திப்புண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.


கும்பம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், நண்பர்களினால் வளர்ச்சி கூடும், வார்த்தைகளில் கவனம் தேவை.


மிதுனம்

பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


கன்னி

பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.


தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


மீனம்

குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**இரக்கமில்லாதவன் நெஞ்சம் இரும்பிலும் கொடியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடம்பிகள் பெருகும் வகையில்

# சூழலை வைத்திருப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு



(யாழ்ப்பாணம்)

நுளம்புக் குடம்பிகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாகாண டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் கருத்துரைக்கும் போதே வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 775 டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இந்நிலையில் கடந்த வருடம் முழுவதும் யாழ். மாவட்டத்தில் 3986 டெங்கு நோயாளர்களே பதிவாகியதுடன் ஆறு மரணங்களும் பதிவாகியது. இதில் ஐந்து கடந்த டிசெம்பர் மாதத்திலே பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காத 1542 இடங்கள் கடந்த 12 ஆம் திகதி வரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 147 இடங்கள் தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களை விட படித்த சமூகம் அதிகமாக வசிக்கும் இடங்களிலே சூழல் பாதுகாப்பு மிக மோசமாக காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். சூழலை சுத்தமாக பேணாது நுளம்பு பரவும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த செயற்பாடுகளுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளுமாறும் ஒவ்வொரு தெருவிலும் பொதுவான இடங்களில் குப்பை தொட்டிகளை வைத்து, அதனை உரியவாறு பராமரிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார். (நி-5-6-33)

## தேசிய நல்லிணக்க பொங்கல்; கலந்து கொண்ட நீதி அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

தேசிய நல்லிணக்க தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் கொண்டாடினார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ.

யாழ்.காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.


நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற பொங்கல் விழா, வியாவில் வாழ் மக்கள், வர்த்தக சமூகத்துடன் வெளி நாட்டு வாழ் உறவுகளும் இணைந்து சிறப்பாக இடம்பெற்றதோடு கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (நி-5-6-33)

## வண்ணை அரசடி விநாயகர் கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை மணிக்கூட்டு வீதி, ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று செவ்வாய்க் கிழமை மு.ப 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-5)

## ஆளுநர் செயலகத்தில் பொங்கல் கொண்டாடிய ஐ.எம்.எப் பிரதிநிதிகள்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

யாழ்.வருகை தந்துள்ள சர்வதேச நாண நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பொங்கல் கொண்டாடியிருந்தனர். (நி-5-6-33)

## இளவாலையில் கைக்குண்டு மீட்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - இளவாலை பகுதியில்கைக்குண்டுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போது, வீதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த இளைஞனை வழிமறித்து சோதனை யிட்ட போது, இளைஞனின் உடைமையில் இருந்து கைக்குண்டை மீட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து இளைஞனை கைது செய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, திருட்டு சம்பவங்கள் சிலவற்றுடன் இளைஞனுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ள நிலையில் தொடர்ந்தும் இளைஞனை பொலிஸ் காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

## தற்காலிக வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரி நல்லூர் வீதி அருள்மிகு பூமிதேவி ஸ்ரீதேவி சமேத மஹாவிஷ்ணு தேவஸ்தான கும்பாபிஷேக நிகழ்விற்காக தேவஸ்தான நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 1 மணியிலிருந்து 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி வரை கீழ்வரும் வீதிகளில் தற்காலிக வீதித்தடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்பதுடன் இவ்வீதிகளுக்கான மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

செம்மணி வீதியிலிருந்து கச்சேரி நல்லூர் வீதி ஊடாக பயணிக்கும் வாகனங்கள் பாணான் குள ஒழுங்கையினூடாக நல்லூர் குறுக்குத் தெருவினை அடைந்து நாவலர் வீதியூடாக மீளவும் கச்சேரி நல்லூர் வீதியை சென்றடைய முடியும்.

கண்டி வீதியிலிருந்து கச்சேரி நல்லூர் வீதியூடாக பயணிக்கும் வாகனங்கள் நாவலர் வீதியூடாக நல்லூர் குறுக்குத்தெருவினை அடைந்து பாணான்குள ஒழுங்கையூடாக மீண்டும் கச்சேரி நல்லூர் வீதியை சென்றடைய முடியும்.

செம்மணி மற்றும் பருத்தித்துறை வீதிகளிலிருந்து கச்சேரி நல்லூர் வீதியூடாக பயணிக்க வேண்டிய பேருந்துகள், மினிபஸ்கள். பெரிய வாகனங்கள் மற்றும் பாரவூர்திகள் என்பன கச்சேரி நல்லூர் வீதியை தவிர்த்து பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் குறுக்குத்தெருவை அடைந்து நாவலர் வீதியை அடைந்து கச்சேரி நல்லூர் வீதியை அடைய முடியும். அதேபோல கச்சேரி நல்லூர் வீதியூடாக வரும் வாகனங்கள் நாவலர் வீதியூடாக நல்லூர் குறுக்குத்தெருவை அடைந்து பருத்தித்துறை வீதியை சென்றடைய முடியும்.

கச்சேரி நல்லூர் வீதியை பயன்படுத்தும் வாகனங்கள் ஆசீர்வாதப்பர் வீதியை பயன்படுத்த முடியும் மற்றும் கச்சேரி நல்லூர் வீதியில் வாகன நடமாட்டங்களை தவிர்க்க வீதித் தடைகள் இடப்படும் என யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் தை மாதம் இன்று செவ் வாய்கிழமை மு.ப 9.00 மணிக்கு களபாவோடை வசந்த நாக பூசணி அம்பாள் தேவஸ்தான கொடியேற்ற வைபவம் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

பூர்த்தி தினமாகிய 25 ஆம் திகதி வியாழக்கிழமை தைப் பூரணையில் "ஸ்ரீ வசந்த நாக புஷ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் தீர்த் தோற்சவம் நடைபெறும்.

அம்பாளின் திருவருட் பெருங் கருணையை முன்னிட்டு மஹோற்சவ காலங்களில் அடியார்கள் வருகை தந்து வழிபாடு செய்து அம்பிகையின் அருட்பிரசாதத்தைப் பெற்றுய் யுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 1200 | 1000 |
| தக்காளி | 650 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 150 |
| கோவா | 700 | 550 | 800 |
| கரட் | -- | 1200 | 1600 |
| பூசணி | 120 | 150 | 150 |
| புடோல் | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 420 | 450 | 500 |
| பாகற்காய் | 700 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 350 | 240 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 700 | 800 | 500 |
| லீக்ஸ் | 450 | 450 | 600 |
| பீற்றூட் | 800 | 400 | 800 |
| கறிமிளகாய் | 700 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 2800 |
| போஞ்சி | 500 | 500 | 700 |
| கத்தரிதம்புள்ள | 650 | 600 | 700 |
| கீரை - 1 பிடி | 180 | 180 | 200 |
| தேசிக்காய் | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 700 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 650 | -- | 1000 |
| முள்ளங்கி | 250 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 60 |
| வல்லாரை | 35 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 சுகாதார நிபுணர் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானம்

(கொழும்பு)

72 சுகாதார நிபுணர் சங்கங்கள் இணைந்து இன்று காலை 6.30 முதல் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளன.

மருத்துவர்களுக்கு அரசாங்கம் வழங்க தீர்மானித்துள்ள 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை தங்களுக்கும் வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவ ஆய்வுக்கூட நிபுணர்கள், கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள், மருந்தாளுநர்கள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நோயாளர் காவுவண்டி ஊழியர்கள் உள்ளிட்ட 72 தொழிற்சங்கங்கள் இந்த பணிப் புறக் கணிப்பு போராட்டத்தில் இணைந்து கொள்ள வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# பிளாஸ்ரிக் துடைப்பங்களுக்கும் வருகிறது தடை-சுற்றாடல் அதிகாரசபை



(கொழும்பு)

சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு பெரும் பங்களிக்கும் பிளாஸ்ரிக் துடைப்பங்கள் மற்றும் விளக்குமாறு ஆகியவற்றின் இறக்குமதியைத் தடை செய்ய வேண்டும் என, மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி, இது தொடர்பில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் என, மேற்படி குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அஜித்மான்ப்பெரும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிளாஸ்ரக் கழிவுகளைக் குறைக்கும் வகையில், "லஞ்ச் சீட்" பாவனையைத் தடை செய்வது தொடர்பில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும், துறைசார் கண்காணிப்புக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், "லஞ்ச் சீட்" களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யுமாறு, மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு, இக்குழு பரிந்துரைகளை வழங்கியது. அதைக் கடைப்பிடிக்க ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. (நி-5-6)

# திடீரென செல்வந்தர்கள் மீது கவனம் செலுத்தும் பொலிஸார்

## பதில் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன்

(கொழும்பு)

திடீரென செல்வந்தர்களாக மாறிய நபர்களை பொலிஸார் பின் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' என்னும் குற்றத் தடுப்பு நடவடிக்கையில் திடீர் செல்வந்தர்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சுமார் ஐம்பதாயிரம் சந்தேக நபர்களை கைது செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த நபர்களை கைது செய்யும் வரையில் 'யுக்திய' தேடுதல் வேட்டை தொடரும் என பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (நி-5-6)



# அநுரவின் அரசியலுக்கு பச்சைக்கொடி காட்டிய எம்.பிக்கள்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு எதிராக முதலில் அரசியல் கூட்டணியை உருவாக்க ஜேவிபி இருக்க வேண்டும் என ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் அவ்வாறானதொரு கூட் டணியை அமைப்பதற்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தற்போது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே காரணம் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு எதிரான முகாமில், ஜேவிபி அதிக மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளதுடன், ஜனரஞ்சக அரசியலைக் கட்டியெழுப்புவதில் அக்கட்சி கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6)

# இன்று ஒரு தகவல் 07



தென்கச்சி கோசுவாமிநாதன்

## மகிழ்ச்சிக்கு வழி

ஒருவர் ரொம்ப கவலையுடன் இருந்தார்! "ஏங்க இப்படி கவலையோடு இருக்கிறீங்க" என்று கேட்டேன் அதற்கு அவர் சொல்றாரு, "கவலைப்படாமல் இருப்பது எப்படி என்று யோசித்துப் பார்த்தேன்..ஒரு வழியும் தெரியவில்லை..! அதுதான் இப்படி கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்று. கவலைப்படாமல் இருக்கிறதுக்கு வழி தெரியாமலேயே கவலைப்பட்டிருக்கிற ரகம் இது! எப்பவும் சந்தோஷமா இருக்கணும்! சௌகரியமா இருக்கணும்! பல பேரோட கவலை இது! பல பேருக்கு என்னா...ஒரு பல்கலைக்கழகத்துக்கே இந்த கவலை வந்துவிட்டது.பின்பு என்ன... இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டது! எப்படி தெரியுமா? அந்த பல்கலைக்கழகத்தில சமூக இயல்துறை ஒன்று இருந்தது! அது ஒரு திட்டத்தைப் போட்டுது!

பல ஆயிரக்கணக்கான நபர்களைப் பேட்டி கண்டது! "எப்பவும் நான் சந்தோஷமா இருக்கேன்... அப்படி என்று சொல்றவங்க... "எப்பவும் நான் கவலையோடுதான் இருக்கிறேன்!" அப்படி என்று சொல்றவங்க.இப்படி இரண்டு விதமா சொல்றவர்களும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையிலே இந்த ஆராய்ச்சிக்கு உதவியா இருந்தாங்க! எல்லாரையும் நுணுக்கமா ஆராய்ச்சி செய்து கடைசியிலே அவங்க செய்த முடிவு என்ன தெரியுமா? "எல்லாருமே மன மகிழ்ச்சியோட இந்த உலகத்துலே இருக்க முடியும்! எல்லாருமே நிம்மதியா இருக்க முடியும்! இது சாத்தியமான விடயம் தான்!" அப்படி என்று அந்தப் பல்கலைக்கழகம் தீர்மானம் பண்ணிவிட்டது! தீர்மானம் செய்ததோட சரியா? அப்படி இல்லை! இதுக்கு என்று சொல்லி... நமக்கு எல்லாம் உபயோகப்படுகிற விதத்திலே ஒன்பது விதமான யோசனைகளைச் சொல்லியிருக்கு! எல்லாம் அனுபவபூர்வமான அறிவுரைகள். அதிலே கொஞ்சம் சொல்றேன்... உபயோகப்படுதா பார்க்கலாம்! முதல் விடயம்! "வெறுப்பு" - "சந்தேகம்" இது இரண்டையும் சுத்தமா ஒதுக்கி தள்ளிப்புடணும்!

ஏதாவது ஒரு குறையை மனசுக்குள்ளே போட்டுக் கொண்டு அதையே பெரிசா நினைத்துக்கொண்டு உட்கார்ந்து இருக்கக் கூடாது! மனிதனுடைய மகிழ்ச்சியிலே 50 சதவீதத்தை சாப்பிடுவது இதுதானாம்! அப்புறம்... நிகழ்காலத்தையும்- வருங்காலத்தையும் மட்டுமே சிந்திக்கணும். கடந்த கால தவறுகள்- தோல்விகள் இதை மனசுக்குள்ளே வச்சிக்கவே கூடாது! போனவருஷம் செத்துப் போன பாட்டியை நினைச்சி இப்ப அழுதால் எப்படி? மூன்றாவது விடயம், மாற்ற முடியாத நிலை-சூழ்நிலை இதை நினைத்து பொருமிக் கொண்டு சக்தியையும் நேரத்தையும் வீணாக்க வேணாம்! நாய்வாலை நிமிர்த்திப் பாக்கணும் எனும் முயற்சி நமக்கு என்னத்துக்கு? அது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே! அடுத்தது என்ன தெரியுமா? எல்லாருடைய வாழ்க்கையிலேயும் பல பிரச்சினைகள் இருக்கத் தான் செய்யுது! அந்தப் பிரச்சினைகளை அடியோட நீக்க முடியாது. அதை அட்ஜஸ்ட் பண்ணி கிட்டு அந்தப் பிரச்சினையோட தோள்மேலேயே ஒரு கையை போட்டுக்கொண்டு போக நாம பழகிக்கணும்! கல்யாணமான வாசகர்களுக்கு இது சொல்லித் தெரிய வேண்டியதில்லே! அவர்களுக்கே தெரியும்!

நிராசையினாலே வாழ்வை பாழடிச்சிக்கக் கூடாது! நிதர்சனங்களுக்கு அஞ்சி விலகி ஓடக்கூடாது! ஆசைப் படுகிறது அத்தனையும் நடப்பதும் இல்லை! எதிர்பார்க்கிறது அத்தனையும் நிறைவேறதும் இல்லை! அடுத்த பொயின்ட்டுக்கு வருவோம், உணர்ச்சி வசப்பட்ட நிலையிலே உள்ளூர குமுறிக்கிட்டு தனியா இருக்கக் கூடாது. அதுமாதிரி நேரத்துலே நம்பகமான நண்பர்கள், இல்லைன்னா உறவினர்கள் இவங்களைத் தேடிக்கிட்டுப் போக ணும்! அவங்களோட பேசிக்கிட்டு இருக்க வேண்டும்.

அடுத்தது: தாழ்வு மனப்பான்மை-தற்பெருமை இது ரெண்டுமே மன அமைதியை கெடுக்கும். தான் சொல்லுறது தான் சரி என்று நியாயப்படுத்தும் குணத்தை விட்டு விட வேணும்.

ஏழாவது பொயின்ட் மனிதப் பண்புகள் ஈவிரக்கம் தன்மானம், நன்றி, விசுவாசம் இதையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் மறக்கக்கூடாது அது மட்டுமல்ல அவர்களுக்கு ஆத்ம திருப்தி அளிக்கக் கூடிய செயல் எதுவோ அதில் ஈடுபட வேண்டும். இப்போது அலுவலகத்தில் வேலை செய்தால் கூட அலுவலகக் கடமைகள்- ஆத்ம திருப்திக்கான கடமைகள் இது இரண்டையும் ஒழுங்காகச் செய்யிறவன்...என்னைக்கும் சந்தோஷமா இருக் கிறான்.

எட்டாவது பொயின்ட், தனக்காக எதுவும் அதிகமா எதிர்பார்க்கக்கூடாது! என்னால் எவ்வளவு முடியும்னு நினைப்பதற்கும் என்னால நிஜமா முடிகிறது எவ்வளவு என்பதற்கும் இடைவெளி அதிகமா இருந்தா மகிழ்ச்சி குறையும்! நம்மாலே எது முடியுமோ அதுக்குத் தகுந்த மாதிரி இலக்குகளை நிர்ணயிக்கணும்...!.

முப்பது கிலோ எடையை தூக்கிறதுக்கே மூச்சு வாங்குது! முன்னூறு கிலோவை தூக்குவேன் என்று என்னத்துக்கு வீணா சவால் விடணும்! கடைசி பொயின்ட் : சொந்த காரியங்களை கவனிக்கிற அதே நேரத்துலே வேறே சில நல்ல காரியங்களிலையும் கவனம் செலுத்தனும்! தன்னலவாதிகள் எப்பவும் மகிழ்ச்சியா இருக்கிறதில்லை! ஆனா உயர்ந்த பொதுநல நோக்கமும் நல்ல பழக்கவழக்கமும் உள்ளவங்க எப்பவும் சந்தோஷமாவே இருக்காங்க! இது அனுபவபூர்வமான உண்மை! அது சரி!

ஏதோ பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப்பண்ணி இவ்வளவும் சொல்லியிருக்கு... இதெல்லாம் நடைமுறைக்கு சரியா வருமான்னு யோசிக்க வேணாம்.பல்லாயிரக்கணக்கான மக்களோட அனுபவம் இது! அனுபவத்தைத்தான் அவங்க தொகுத்துச் சொல்லியிருக்காங்க! அதனாலே...முடிஞ்ச அளவுக்கு சந்தோஷமா இருக்கிறதுக்கு நீங்களும் முயற்சி பண்ணுங்க! நானும் முயற்சி பண்றேன்..!! ஞாபகம் இருக்கட்டும்... சந்தோஷமா இருக்கிறதுக்கு 9 பொயின்ட் சொல்லியிருக்கேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 379





வேடன் வேடந்தரித்த சிவபெருமானும் அர்ச்சுனனும் கட்டிப் புரண்டதைப் போல் புரண்டார்கள். திக்கஜங்களில் இரண்டு இடம் பெயர்ந்து ஒன்றோடொன்று மோதிக் கொள்வது போல் அவர்கள் மோதிக் கொண்டார்கள்.

வந்தியத்தேவனுடன் வந்த ஆழ்வார்க்கடியானும் அவர்களுக்கு முன்னால் வந்த வீரர்களும் விலகி நின்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள். மரக்கிளைகளின் அசைவினால் அடிக்கடி சலித்த நிலாவெளிச்சத்தில் அவர்கள் அந்த அதிசயமான சண்டையைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சீக்கிரத்தில் காலடிச் சத்தங்கள் கேட்டன. கையில் கொளுத்தப்பட்ட சுளுந்துகளுடன் வீரர்கள் சிலர் மரக்கிளைகளை விலக்கிக்கொண்டு அவ்விடத்திற்கு வந்தார்கள். அப்படி வந்தவர்களும் அதிசயத்துடன் அந்தத் துவந்த யுத்தத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கலானார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் சுற்றிலும் ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது.

கடைசியாக வந்தியத்தேவன் கீழே தள்ளப்பட்டான். அவனைத் தள்ளிய வீரன் அவன் மார்பின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு இடையில் சுற்றியிருந்த துணிச் சுருளை அவிழ்த்தான். அதற்குள்ளிருந்த ஓலையைக் கைப்பற்றினான். அதைத் தடுப்பதற்கு வந்தியத்தேவன் ஆனமட்டும் முயன்றும் அவன் முயற்சி பலிக்கவில்லை.

ஓலை அவ்வீரனுடைய கையில் சிக்கியதும் துள்ளிப் பாய்ந்து சுற்றிலும் நின்றவர்கள் பிடித்திருந்த சுளுந்து வெளிச்சத் தண்டை சென்றான். அவன் ஒரு சமிக்ஞை செய்யவும் மற்றும் இரு வீரர்கள் ஓடிவந்து வந்தியத்தேவன் தரையிலிருந்து எழுந்திருக்க முடியாமல் பிடித்துக் கொண்டார்கள்.

வந்தியத்தேவன் சொல்ல முடியாத ஆத்திரத்துடனும் தாபத்துடனும் "பாவி வைஷ்ணவனே! இப்படிப்பட்ட சிநேகத் துரோகம் செய்யலாமா! அவனிடமிருந்து அந்த ஓலையைப் பிடுங்கு!" என்று கத்தினான்.

"அப்பனே! என்னால் இது இயலாத காரியம் ஆயிற்றே!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சீச்சீ! உன்னைப்போன்ற கோழையை நான் பார்த்ததேயில்லை! உன்னை வழித்துணைக்கு நம்பி வந்தேனே?" என்றான் வந்தியத்தேவன்.

ஆழ்வார்க்கடியான் குதிரையிலிருந்து சாவதானமாக இறங்கி வந்தியத்தேவன் அருகில் சென்று, அவன் செவியில், "அடே அசடே! ஓலை நீ யாருக்குக் கொண்டுவந்தாயோ, அவரிடந்தான் போயிருக்கிறது! ஏன் வீணாகப் புலம்புகிறாய்?" என்றான்.

சுளுந்து வெளிச்சத்தில் ஓலையைப் படித்துக் கொண்டிருந்த வீரனுடைய முகத்தை மற்ற வீரர்கள் பார்த்து விட்டார்கள். உடனே ஒரு மகத்தான குதூகல ஆரவாரம் அவர்களிடமிருந்து எழுந்தது.

"பொன்னியின் செல்வர் வாழ்க! வாழ்க!"

"அந்நிய மன்னரின் காலன் வாழ்க!"

"எங்கள் இளங்கோ வாழ்க!"

"சோழ குலத் தோன்றல் வாழ்க!" என்பன போன்ற கோஷங்கள் எழுந்து அந்த வனப்பிரதேசமெல்லாம் பரவின. அவர்களுடைய கோஷங்களின் எதிரொலியை போல் மரக்கிளையில் தூங்கிக் கொண்டிருந்த பட்சிகள் விழித்தெழுந்து இறகுகளைச் சடசட வென்று அடித்துக் கொண்டு பலவித ஒலிகளைச் செய்தன.


இதற்குமுன் வந்திருந்தவர்களைத் தவிர இன்னும் பல வீரர்களும் என்ன விசேஷம் என்று தெரிந்து கொள்வதற்காகத் திடுதிடுவென்ற சத்தத்துடனே மரஞ்செடி கொடிகளை விலக்கிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யானைக்கு வந்த திருமண ஆசை



மன்னரின் யானையொன்று அண்டை அயல் நகரங்களுக்குச் சென்று பயிர்களை அழித்தும் மக்களில் பலரை நசுக்கிப் படுகாயப்படுத்தியும் அடிக்கடி பெருந்தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது.

இதுபற்றி பாதிக்கப்பட்ட சிலர் மன்னரிடம் முறையிட்ட போது மன்னர் அதனைப் பெரிய விடயமாகக் கருதவில்லை.

தன்னுடைய யானை மீது வீண் புகார்கள் கூறுவதாகச் சிலரைக் கடிந்தும் கொண்டார். அதனால் யானையின் அட்டகாசம் பற்றி மேற்கொண்டு முறையிட யாருக்கும் துணிச்சல் வரவில்லை.

அவர்கள் முல்லாவைச் சந்திந்து மன்னரின் யானையால் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி எடுத்துக்கூறி மன்னரிடம் சொல்லி ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். முல்லா தம்மிடம் வந்தவர்களை நோக்கி நீங்கள் எல்லாம் ஒன்று திரண்டு அந்த யானையைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப்போட்டு விடுங்கள் என்றார்.

"ஐய்யய்யோ மன்னரின் யானையைக் கட்டிப்போட்டு மீள முடியுமா? மன்னர் கடுமையான தண்டனை விதிப்பார்" என்று அச்சத்துடன் கூறினர் ஊர் மக்கள்.

நீங்கள் நான் சொன்னவாறு செய்யுங்கள். மன்னரிடமிருந்து யாராவது அங்கு வந்து கேட்டால் முல்லாதான் யானையைக் கட்டிப் போடச் சொன்னதாகக் கூறி விடுங்கள் என்று முல்லா கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூடி மிகவும் சிரமப்பட்டு யானையைப் பிடித்து ஒரு பெரிய மரத்தில் கட்டிப் போட்டு விட்டனர்.

செய்தி அறிந்த மன்னர் முல்லாவுக்கு ஆள் அனுப்பி தம்மை வந்து சந்திக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். முல்லா அரண்மனை சென்று மன்னரை வணங்கினார்.

"என்ன முல்லா என்னுடைய யானையைக் கட்டிப் போட்டீராமே? உமக்கு அவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது?" என்று கோபத்துடன் கேட்டார்.

முல்லா பணிவுடன் மன்னரை நோக்கி "மன்னர் பெருமானே தங்களது யானை எங்கள் ஊர்ப் பக்கம் வந்து தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விட்டது. மன்னருடைய யானையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது குடிமக்களாகிய எங்கள் கடமையல்லவா? அதனால் தங்கள் யானைக்காக ஒரு பெண் யானையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். பெண் யானை கிடைப்பதற்குள் யானை கோபித்துக் கொண்டு ஏதாவது தாறுமாறான நடவடிக்கையில் ஈடுபட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான் அதைக் கட்டி வைத்திருக்கிறோம்" என்றார்.

"என்ன? யானையாவது தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்பதாவது. யாரிடம் விளையாடுகிறாய் ?" என்று மன்னர் கோபத்துடன் கேட்டார்.

மன்னர் பெருமானே தயவு செய்து சிரமம் கருதாது ஒரு தடவை எங்கள் ஊருக்கு வந்து தங்கள் யானையையே விசாரித்துப் பாருங்கள். நான் ஏதாவது பொய் சொல்லியிருந்தால் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன் என்று முல்லா கூறினார்.

மன்னர் தமது பரிவாரங்களுடன் முல்லாவை அழைத்துக் கொண்டு முல்லா சொன்ன பகுதிக்குச் சென்றார்.

வழி நெடுக்கிலும் விளை நிலங்களுக்கும் பழ மரங்களுக்கும் ஏற்பட்டிருந்த கடுமையான சேதத்தை அழிவைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பேரழிவுக்கு தனது யானைதான் காரணம் என்பதையும் உணர்ந்தார். தன்னை அந்தப் பகுதிகளுக்கு வரச் செய்வதற்காக முல்லர் கையாண்ட தந்திரத்தையும் புரிந்து கொண்டார்.

மன்னர் உடனே தனது அதிகாரிகளை அழைத்து யானையினால் யார் யார் அதிகமான சேதத்துக்கு உள்ளாகியிருக்கிறார்களோ அவர்களுக்குத் தாராளமான நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டார். பிறகு யானையைக் கொண்டு சென்று அரண்மனையில் கட்டிப் போடுமாறும் உத்திரவிட்டார்.

முல்லாவுக்கு ஊர் மக்கள் நன்றி சொல்லி அவரை வாழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை.
– திருமூலர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாலைப் பொழிந்து தரும் பசுவைப் பாதுகாப்போமடி பாப்பா

இன்று பட்டிப்பொங்கல். நேற்று தைத் திங்கள் முதலாம் நாள் சூரியபகவானுக்குப் பொங்கல் செய்து தமது நன்றிக் கடனைச் செலுத்திய விவசாயிகள், இன்று பட்டிப் பொங்கல் செய்கின்றனர்.

ஆம், இப்போதிருக்கின்ற நவீன தொழில் நுட்ப வளர்ச்சி இல்லாத அந்தக் காலத்தில் விவசாயிகளின் அத்தனை விவசாய முயற்சிகளிலும் உறுதுணையாக இருந்த பசுக்களுக்கும் காளைகளுக்கும் நன்றி செலுத்தும் பொருட்டு பட்டிப்பொங்கல் செய்கின்ற பண்பாடு தைத்திங்கள் இரண்டாம் நாளாக வகுக்கப் பட்டது.

வயல்கள், பயிர்செய் நிலங்களை உழுது பண்படுத்துவதற்கும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் எருதுகளே விவசாயிகளின் உறுதுணையாயின.

தவிர, பசுக்கள் நிறை உணவாகிய பாலைத் தந்து விவசாயிகளினதும் அவர்களின் குடும்பத்தினதும் உடல் நலத்தைப் பாதுகாத்ததோடு பசும் பாலை விற்றுச் சீவியம் நடத்துவதற்கும் பசுக்கள் பேருதவி புரிகின்றன.

இவையாவற்றையும் கடந்து, இயற்கைப் பசளையாகிய மாட்டெரு பயிர்செய் விவசாயிகள் கணிசமான விளைச்சலைப் பெறுவதற்கு உதவிற்று.

உண்மை. சமகாலத்து அசேதனப் பசளைகளும் கிருமிநாசினிகளும் உணவை நஞ்சாக்கி நிற்கின்ற இவ்வேளையில், அன்று கோமயம் மிகச் சிறந்த பசளையாகவும் கோசலம் மிகச் சிறந்த கிருமிநாசினியாகவும் தொழிற்பட்டு தூய்மையான தானியங்கள் உணவாகக் கிடைப்பதற்கு வழிவகுத்தன.

ஆக, பசுக்களும் எருதுகளும் எங்கள் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த உறவு.

பெற்ற தாய் போல் பாலைத் தருகின்ற பசுக்களைத் தாயாக – தெய்வமாகப் போற்றிய நம் தமிழினம் பட்டிப்பொங்கலைச் செய்து, பசுக்களுக்கும் எருதுகளுக்கும் நன்றி செலுத்தியது.

ஆனால் இன்று பட்டிப்பொங்கல் என்றால் என்ன? என்று கேட்கின்ற அளவில் பட்டிகளும் இல்லை. பசுக்களும் எருதுகளும் இல்லை என்றாயிற்று.

அந்தோ! கொடுமை. தாயாக வழிபட்ட பசுக்களைக் கொன்று அதன் புலாலை உண்ணுகின்ற கொடுமை நம் மண்ணில் அரங்கேறும்போது,

அம்மா என்று அழைக்கின்ற பசுக்களின் தலையில் ஓங்கி அடித்து அதனைக் கொன்று அதன் இறைச்சியை விற்று வாழ நினைக்கின்ற இந்தக் காலத்தில், காலம் முழுவதும் தன் பாலைத் தந்து நம்மை வாழ வைத்த பசுவை இறைச்சிக்கு விற்று விட்டு நிம்மதியாக இருக்கின்ற சூழ்நிலை வந்த பின்பு, பட்டிப் பொங்கல் எங்ஙனம் அர்த்தம் பெறும்.

ஓ! பஞ்சகௌவியம் தந்த எங்கள் ஊர்ப் பசுக்களை இழந்து வருகின்றோம்.

எஞ்சி இருக்கின்ற ஊர்ப் பசுக்களையும் களவாகக் கொன்று இறைச்சி கடத்துகின்ற ஆறறிவுக் கலாசாரம் சண்டித்தனத்தோடு சன்னதம் ஆடுகிறது.

அதைத் தடுத்து நிறுத்த வேண்டியவர்களே சன்னதத்துக்கு சல்லாரி போடுகின்றார்கள் என்றால், என் செய்வோம்.

எம் அருமைக் குஞ்சுகளே! இளம் பிஞ்சுகளே! பசுவைப் பாதுகாப்போம் என்று பாலர் வகுப்பில் படியுங்கள். அதனை உங்கள் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடியுங்கள்.

# பணவீக்கம் தொடர்ந்து அதிகரிக்குமானால் அடிப்படை தேவைகள் கூட கேள்விக்குறியே!

## பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பாரதூரமான நிலை உருவாகும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வற் வரி அதிகரிப்பால் ஏறக்குறைய 2.5 வீத பணவீக்க வீதத்தை நாம் எதிர்கொள்ள நேரிடும் என்று மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு கணித்துள்ளது என்று. நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இலங்கையில் பணவீக்கம் உடனடியாக 6.4 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல பணவீக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்

பணவீக்கம் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிக்கும். ஏற்கனவே எதிர்நோக்கும் நெருக்கடிகள் மேலும் உக்கிரமடையும் என்றார்.

இதேவேளை, வரி அதிகரிப்பு, பணவீக்க அதிகரிப்பை நேரடியாகப் பாதித்துள்ள நிலையில், மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தை மக்களின் குறுகிய கால அல்லது நீண்டகால நலனுக்காக திறமபட பயன்படுத்துவதில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

வரிகளை உயர்த்துவதுடன் செலவுகளை நிர்வகிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கும் நிலைமை மற்றும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அரசு வரிகளை உயர்த்தியுள்ளதால், இந்த நேரத்தில் மக்களுக்கும் பொறுப்பு உள்ளது என்று கலாநிதி பிரியங்க துனுசிங்க சுட்டிக் காட்டினார். (ம-7)

# வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் ரி.ஐ.என் பெறுவது கட்டாயமில்லை

(கொழும்பு)

வெளிநாட்டில் கல்வி கற்கும் இலங்கையர்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் ரி.ஐ.என் இலக்கத்தைப் பெறுவது கட்டாயமில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் பி.கே. சமன் சாந்த தெரிவித்தார்.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் இலங்கையிலிருந்து வருமானம் ஈட்டினால் (வட்டி வருமானம், வாடகை வருமானம் அல்லது வங்கிகளில் நிலையான வைப்புத்தொகை மூலம் வருடத்திற்கு 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்கள்) கண்டிப்பாக TIN எண்ணை பெற வேண்டும் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ரி.ஐ.என் நம்பரைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளதாகவும், வாகனப் பதிவு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு உள்நாட்டு இறைவரித்திணைக்களம் மோட்டார் வாகனத் திணைக்களத்துடன் கணினிகளை இணைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலங்கை சுங்கத்துடன்கணனிவலையமைப்பில் செயற்படுவதால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான அனைத்து தகவல்களையும் திணைக்களம் பெற்றுக் கொள்கிறது எனவும் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

மேலும் அனைத்து நிறுவனங்களுடனும் வலையமைப்பதன் மூலம் தலைமறைவாக இருக்கும் வரி ஏய்ப்பு செய்பவர்களை அடையாளம் காண முடியும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (ம-7)

# போதைப் பொருட்களை விநியோகித்தவர் கைது

(கொழும்பு)

பொருட்களை விநியோகம் செய்யும் சேவை வழங்கும் நிறுவனத்தில் பணிபுரியும் போர்வையில்,

போதைப்பொருள் கடத்திய ஒருவர் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யுக்திய நடவடிக்கையின் கீழ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம்,

அதன் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் பிற்பகல் எடரமுல்லை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபரை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட போது சந்தேகநபரிடம் இருந்து 25 கிராம் ஐஸ்போதைப் பொருள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது 332 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள்,

50 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 97 எம்எம் 9.9 தோட்டாக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

# போதை மாத்திரைகள் மீட்பு

(கொழும்பு)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 57 ஆயிரம் போதை மாத்திரைகள் தமிழகப் பொலிஸாரால் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்ட கடற்கரைக்கு எடுத்து வரப்பட்ட போதை மாத்திரைகள் சிக்கியுள்ளன.

பொதி செய்யப்பட்ட போதை மாத்திரைகள் ஒரு வாகனத்தில் எடுத்து வரப்படுகின்றன என்று தூத்துக்குடி பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையின் போதே இந்த 57 ஆயிரம் போதை மாத்திரைகளும் வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. (ம-7)

# கொழும்பில் இணையம் மூலம் நிதி மோசடி

## 6 பேர் கைது

(கொழும்பு)

தெஹிவளையில் இணையத்தளம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டு வந்த நிறுவனமொன்றை சுற்றிவளைத்த போது ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் அவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த நிறுவனத்திலிருந்து 21 கணினிகள் மற்றும்49 கையடக்க தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதானவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# தைப்பொங்கல் விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(புலோலி)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் சனசமூக நிலையம் நடாத்தும் தைப்பொங்கல் விழாவும், விளையாட்டுப் போட்டியும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று (16.01) செவ்வாய்க்கிழமை நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.


ச.சுரேஷ் தலைமையில் நண்பகல் 12.30 மணிக்கு பொங்கல் நடைபெற்று தொடர்ந்து மட்டுப் படுத்தப்பட்டளவில் விளையாட்டுப் போட்டிகளும் நிலைய எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் இ. கிருபாகரசூரியன் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணை ஏவிய வடகொரியா
## ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு கண்டனம்

(பியாங்யாங்)

**வடகொரியா ஹைப்பர்சோனிக் வார்ஹெட் பொருத்தப்பட்ட புதிய திட எரிபொருள் ஏவுகணையை சோதனை செய்துள்ளது இந்த ஏவுகணை பரிசோதனை நடவடிக்கை ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை மீறுவதாக ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.**



சக்திவாய்ந்த மற்றும் கடினமான ஆயுதங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை வடகொரியா மேற்கொண்டு வரும் நிலையில் நேற்று முன் தினம் இந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அதன் முதல் இராணுவ உளவு செயற்கைக் கோளை ஏவியதை அடுத்து பிராந்தியத்தில் பதற்றங்கள் அதிகரித்துள்ளன.

பசுபிக் பகுதியில் அமெரிக்கா உள்ளிட்ட அதன் நட்பு நாடுகளின் பிரசன்னத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள வடகொரியா, அணு ஆயுதத் தாக்குதலை நடத்தும் திறனை மேம்படுத்துவதாக உறுதியளித்துள்ளது.

நேற்று முன்தினம் பியோங்யாங் பகுதியில் இருந்து மதியம் 2:55 மணியளவில் ஏவப்பட்ட இந்த ஏவுகணையானது நாட்டின் கிழக்கு கடற்கரையில் இருந்து சுமார் 1,000 கி.மீ வரை சென்றதாக தென்கொரியா அறிவித்துள்ளது.

இதேநேரம் இந்த ஏவுகணை சோதனை அச்சுறுத்தல் அல்ல என்றும் வட கொரியாவின் ஆயுதத் திட்டத்தின் நிலையற்ற தாக்கத்தை எடுத்துக்காட்டுவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஹவுதி கிளர்ச்சியாளர்களை பலமுறை எச்சரித்த பிரித்தானியா



(லண்டன்)

அமெரிக்காவுடன் இணைந்து பிரித்தானியா தாக்குதல் மேற்கொள்வதற்கு முன்னர் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் டேவிட் கேமரூன் தெரிவித்துள்ளார்.


இதேவேளை செங்கடலில் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை தாக்குதவதைத் தவிர பிரித்தானியாவுக்கு வேறு வழியில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவளை கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து செங்கடலில் பயணிக்கும் வணிகக் கப்பல்கள் மீது ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் கப்பல் நிறுவனங்கள் இப்போது செங்கடல் வழியாகச் செல்லாமல் தென்னாபிரிக்காவைச் சுற்றியுள்ள நீண்ட பாதையைப் பயன்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பிரித்தானியா உள்ளிட்ட உலக நாடுகளில் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

## இந்தோனேசியாவில் மீண்டும் வெடித்த எரிமலை



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள மராபி மலை மீண்டும் வெடித்துள்ளது.

எரிமலையில் இருந்து தீக்குழம்பு வெளியேறியதால், அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அங்குள்ள 150 இற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். நேற்று முன்தினம் அதிகாலை 6.21 மணிக்கு எரிமலை வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் மராபி மலையில் வெடிப்பு ஏற்பட்ட போது, எரிமலையில் நடைபயணம் மேற்கொண்ட 75 பேரில் பலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 23 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இந்திய ரூபாவை பயன்படுத்த 35 நாடுகள் ஒப்புதல்

(டில்லி)

இந்திய ரூபாவை தங்கள் நாட்டில் பயன்படுத்திக் கொள்ள இதுவரை 35 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜீன் ராம் மேம்வால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் இந்திய ரூபாவின் 100 ஆண்டுகால பயணம் என்ற தலைப்பின் கீழ் நடந்த மாநாட்டில் பேசிய போதே இதனை தெரிவித்தார். தொடர்ந்து அவர் பேசுகையில், அம்பேத்கர் சட்ட மேதை மட்டுமல்ல, பொருளாதாரத்திலும் நிபுணத்துவம் பெற்றவர்.

ஆங்கிலேயர்கள் இந்திய ரூபாவின் மதிப்பை குறைக்க முயன்றபோது அதனை எதிர்கொண்டதில் அம்பேத்கரின் பங்களிப்பு முக்கியமானது.

அவர் அளித்த ஆய்வறிக்கையின் மூலமாகவே இந்திய ரிசர்வ் வங்கி உருவானது. தற்போது மோடியின் ஆட்சியில் ரூபாவின் மதிப்பு ஸ்திரமாக உள்ளது. இதுவரை 35 நாடுகள் தங்கள் நாட்டில் இந்திய ரூபாவை பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளன.

இதன்மூலம் அந்த நாடுகளுக்கு செல்லும் போது நமது நாட்டு பணத்தையே பயன்படுத்திக் கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார். (நி-5-6)

## இந்திய இராணுவத்தை வெளியேற்ற காலக்கெடு விதித்த மாலைதீவு ஜனாதிபதி

(மாலே)



இந்திய இராணுவத்தை வெளியேற்ற மாலைதீவு ஜனாதிபதி முகமதுமுயிசு காலக்கெடுவை விதித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்குள் இந்திய இராணுவத்தை திரும்பப் பெற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கு மருத்துவ உதவி மற்றும் கடல் கண்காணிப்புக்காக அதிநவீன இலகுரக ஹெலிகொப்டர்கள், டார்னியர் சிறிய ரக விமானம் ஆகியவற்றை இந்தியா வழங்கியுள்ளது.

அவற்றை அந்நாட்டில் பராமரித்து, இயக்குவது உள்ளிட்ட பணிகளில் இந்திய இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மாலைதீவில் உள்ள இந்திய இராணுவ வீரர்களை மார்ச் 15 ஆம் திகதிக்குள் மாலைதீவில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு என முயிசு தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 10 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய ட்ரோலர் படகும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கைதான 10 மீனவர்களும் மயிலிட்டியில் வைத்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-7)

## நாடு முழுவதும்...

கைதானவர்களில் போதைப்பொருள் விவகாரங்களுடன் தொடர்புடைய 254 பேர் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 31,417 பேரில் 942 பேரும் இந்த சோதனை நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)



















## ஜனாதிபதித்...

சுமார் 81.9 சதவீத மக்கள் பொருளாதாரத்தை உற்பத்தி அடிப்படையிலான ஒன்றாக மாற்றுவதன் மூலமும் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று நம்புகிறார்கள்.

34.6 சதவீதம் பேர் மட்டுமே அமைப்பு மாற்றத்தை நம்புகிறார்கள், அதேநேரத்தில் 16.5 சதவீதம் பேர் கடுமையான சட்டங்களின் மூலம் நாட்டை மேம்படுத்த முடியும் என்று நம்புகிறார்கள் என குறித்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. (ம-7)

## இரு தமிழ்...

களின் கீழ் தண்டனை பெற்று ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்பு வழங்கியுள்ளார்.

நாகலிங்கம் மதன்சேகர் மற்றும் செல்லத்துரை கிருபாகரன் ஆகிய கைதிகள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பரிந்துரையின் பேரில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட பின்னர் இருவரும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

இதில் மதன்சேகருக்கு 2023ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டில் கிருபாகரன் குற்ற வாளி என நிரூபிக்கப்பட்டதை அடுத்து 2022 ஜூலை 20ஆம் திகதி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தமிழர்களின்...

நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார கட்டமைப்பிற்கு அவர்கள் ஆற்றிய பல பங்களிப்புகளையும் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

கல்வி, மருத்துவம், வணிகம், கலை, இலக்கியம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர்களின் பங்களிப்புகள் தமிழ் சமூகத்தையும் நாட்டையும் வலிமையாக்கியுள்ளதாகவும் உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள தமிழ் மாணவர்களின் கடின உழைப்புக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் சுயநிர்ணயம், சமாதானம் மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் ஆற்றிய தியாகங்களை நாம் நினைவுகூர வேண்டிய தருணமும் இது என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதில் இலங்கை அரசாங்கம் இனியும் தாமதிக்காது என்பதை உறுதிசெய்ய தொழிற்கட்சி தொடந்து அழுத்தத்தை பிரயோகிக்கும் என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வல்வெட்டித்துறை...

பட்டம் முதலிடம் பெற்றது.

இதனை வினோதன் மோகன் என்பவர் கட்டியிருந்தார்.

2ஆம் இடத்தை பிரசாந் என்பவரின் விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்ட செயற்கைக் கோள் பட்டம் பெற்றுக் கொண்டது. (ம-7,33,60)

## யாழ்., மன்னார்...

மாவட்டங்களில் காற்றின் தரம் குறைந்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை மற்றும் கொழும்பு கோட்டைப் பகுதிகளில் காற்று மாசு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் முகக்கவசம் அணியுமாறு சுகாதாரத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7)

## 5 ஆயிரம்...

பத்து மாவட்டங்களில் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்ட அறுபத்தேழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஐந்தாயிரத்து இருபத்து ஒன்பது டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்தொகை ஆயிரத்து 700 ஆகும்

வட மாகாணத்தில் ஆயிரத்து நூற்று தொண்ணூற்று நான்கு டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (ம-7)

## நாடு...

தில் நாட்டைப் பொறுப்பெடுத்து நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்வதற்குரிய வேலைத் திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்

அதன் காரணமாக தற்போது நாட்டில் சுமுகமான நிலைகாணப்படுகின்றது.

எனினும் நாட்டில் மேலும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் மற்றும் மதங்களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற்படுமிடத்து நாட்டினை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாண நாகவிகாரையில் தேசிய நல்லிணக்க சபையின் அங்கத்தவர்களுக்கான நியமனச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றைய தினம் நீதி அமைச்சர் தலைமையில் இடம்

# கந்தகாடு மோதல் சம்பவம் அறிக்கை இன்று

வெலிகந்த கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான அறிக்கை இன்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மதிய உணவு வேளையின்போது, கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இரு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பில் நீதியமைச்சர் அறிக்கை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெற்றது

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மும்மத தலைவர்களுக்கும் நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (ம-7,33)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18603)

076 825 7716 (ஆகாஸ்)


# மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5.15 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பேருந்து சிலாவத்தை சந்திக்கு அண்மித்த போது பிரதான வீதிக்கு செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் இ.போ.ச பேருந்துடன் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கள்ளப்பாடு பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இ.போ.ச பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)


## மாப்பிள்ளை தேவை

- உடுப்பிட்டி, இந்து, கௌரவ குலம், 1981, மிருகசீரிடம், B.Sc. Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1993, சதயம், 5'10" உயரம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம் 1989, புனர்பூசம், Masters in Phycology, Norway Citizen Fair, Slim, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- நயினாதீவு - காரைநகர், இந்து கௌரவகுலம் 1996, பூராடம் M.D Doctor, USA பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வட்டுக்கோட்டை, இந்து கௌரவ குலம், 1990, ரேவதி, Masters Degree, Uk அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- திருநெல்வேலி இந்து, கௌரவ குலம் 1982, மருகசீரிடம் M.Sc, Associate Director, Divorce, Uk Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- பருத்தித்துறை - சண்டிலிப்பாய், இந்து, கௌரவ குலம் 1991, பூசம், B.Sc (UK) CiMA (UK) Accountant, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர் இந்து, கௌரவ குலம், 1995, ஆயிலியம Masters & Pharmacy (Uk Univercity) Denmark இல் பிறந்த UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவ குலம், 1992, ரேவதி, Graduate, Accountant, Uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(18641)

S.Sharma J.P
Astrology
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193

## மணப்பெண் தேவை

- யாழ்ப்பாணம், இந்து, கௌரவ குலம், 1984, சுவாதி, B.Sc Business Managment, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1988, சதயம், M.Sc Engineering UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருகோணமலை, இந்து, கௌரவ குலம் 1984, ரேவதி, Qualified Drafstman, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரம்பன் - Jaffna Town இந்து, கௌரவ குலம், 1988, ரோகிணி, B.Sc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மண்டைதீவு, இந்து, கௌரவ குலம் 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34944
- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1990, ரேவதி, Phd in Enginering, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம், 1988, உத்தரம், B.Sc Engineering, USA, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம், 1987, புனர்பூசம் B.Sc Engineering (Civil), Singapore Citizen, Vegetarian மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 32553

(18641)

S.Sharma J.P
Astrology
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193

## Zoom மூலமான புலமை வகுப்பு

தரம் 03,04,05ம் வகுப்புகளுக்கு வீட்டில் இருந்தபடி கற்று சிறந்த பெறுபேறு எடுப்பதற்கான ஒரு வாய்ப்பு.

பகுதி I, II இற்கு பொருத்தமான 100 வினாத்தாள்கள் செய்துவிடப்படும். (18630)

☎-077 214 0675


## மரண அறிவித்தல்



### வாலாம்பிகை சண்முகநாதன்
**( IS Teacher )**

இல. 604, நாவலர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வாலாம்பிகை சண்முகநாதன் (IS teacher) அவர்கள் நேற்று (15.01.2024) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - சோமசேகரம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற IS சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசையா, துரைச்சாமி, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அருமைநாதினம், தங்கலட்சுமி, புவனேஸ்வரி, குணபூசனம் மற்றும் அருளம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 604, நாவலர் வீதி,
அரியாலை. (18643)

தகவல்:
குடும்பத்தினர்


## வீட்டுப் பணிப்பெண் தேவை

புலோலியில் உள்ள வீடொன்றில் வீட்டுவேலை செய்து, பிள்ளைகளைப் பராமரிக்கப் பணிப்பெண் தேவை. (18639)

☎-077 459 7938

## ENGLISH LITERATURE
Grade 10 & GCE (A/L) - 2026

by
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng, SLTES (18638)

NEWTON Nallur.

☎-077 792 3653

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-8139)

V2 TRAVELS

எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA
VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8139)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1 Km மெயின்றோட்டுடன் உள்ளது.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (18640)

076 788 0591
077 129 4999


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org